
# இதய ஒலி

## கவிதைத் தொகுதி



கே.எம்.எம்.இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய ஒலி

(கவிதைத் தொகுதி)

- கே.எம்.எம். இக்பால் -

வெளியீடு –

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
தி/கிண்ணியா மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய ஒலி (கவிதைத் தொகுதி)


| | |
|---|---|
| நூலாசிரியர்:- | கே.எம்.எம். இக்பால்,<br>கடற்கரை வீதி,<br>கட்டை ஆறு,<br>கிண்ணியா - 04 |
| பதிப்புரிமை:- | ஆசிரியருக்கே |
| வெளியீடு:- | பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,<br>தி / கிண்ணியா மத்திய கல்லூரி |
| அச்சுப்பதிவு:- | ரெயின்போ அச்சகம்,<br>திருக்கோணமலை. |
| பக்கங்கள்:- | 26 |
| தாளின் அளவு:- | $A_5$ |
| முதற்பதிவு:- | 2004 நவம்பர் |





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கிண்ணியா மண்ணிலிருந்து கொண்டு கவிதைகள் படைத்து வரும் கே.எம்.எம். இக்பால் அவர்களின் ஆக்கங்கள் பலவற்றை நான் ஸ்பரிசித்திருக்கின்றேன். இன்று 'இதய ஒலி' என்ற தலைப்பிலான அவரது கவிநூலுக்கு அணிந்துரை வழங்குவதையிட்டு மனமகிழ்வு வெகுவாகக் கொள்கிறேன்.

காலத்தின் மாற்றங்களுக்கேற்ப கருத்துகளிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என எதிர்பார்ப்பது பொது நியதி. ஒரு காலத்துக்குப் பொருத்தமான கருத்துக்கள் அடுத்து வரும் காலத்துடன் பொருந்தாமல் போகலாம். தான் வாழும் சூழலுடன் ஒன்றி, சமூகத்தின் மீது தனது பார்வையைப் படரவிடும் படைப்பாளியினால் தான் காலத்தின் தேவையை உணர்ந்த கவிதைகளைப் பிரசவிக்க முடியும். கவிஞர் கே.எம். இக்பால் அவர்களை, காலத்தின் தேவையை நன்கு உணர்ந்த கவிஞனாகவே இங்கு நான் காண்கிறேன். வெறுமனே ஆகாயத்தில் கோட்டைகள் கட்டி கொட்டாவி விடுவதைத் தவிர்த்து, மண்மீது பார்வையைப் பதித்துக் கல்லையும் முள்ளையும் இனங்கண்டதாலே, சமூகப் பிரக்ஞைகளுடன் இரண்டறக் கலந்த கவிதைகளை இவரால் இயற்ற முடிந்திருக்கிறது. "கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது" அதைப் போன்று இந்நூல் சிறியதென்றாலும், இதில் இடம்பெற்றுள்ள கவிதைகளினூடு விசாலமான பரப்பினை இனங்காட்டக் கவிஞர் விழைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

சமாதானம், தேசிய ஒருமைப்பாடு, இன ஐக்கியம், சமூகக் கட்டுக்கோப்புக்கள்ஈ சமூக சிந்தனைகள், மாற்றாரை மதிக்கும் பாங்கு போன்ற சத்தான கருத்துக்கள் இவர் கவிதைகளில் தொனிக்கின்றன.

"அகதிகளின் வாழ்வில் ஒளி சேர்ந்திருக்க
அனைவரும் சம உரிமை அனுபவிக்க
அரசியலில் இனவாதம் அணைந்திருக்க
அழகாக சமாதானம் மலர்ந்திடுக!" என்று கவிஞர் "சமாதானம் மலர்ந்திடுக' எனும் கவிதையினூடாகக் கூறும் போது இன ஐக்கியத்துக்கான குரலாக மட்டுமன்றி, மன நெருடல்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடாகவும் அமைவதை அவதானிக்கலாம்.

சமூகத்தை சமூகநோக்குடன் அவதானிக்கும்போதே, உள்ளத்து உணர்வுகள் உள்ளார்ந்த வெளிப்பாடுகளாய்ப் பரிணமிக்கின்றன.

"தமிழ்மொழியும் சட்டமொழி யாகி விட
தமிழ்ச் சான்றோர் பெருமைகளும் உயர்ந்து விட
தண்டமிழைத் தென்னவரும் பயின்று வர
தளர்வற்றுச் சமாதானம் மலர்ந்திடுக!" என்று தனது சமூகப் பற்றோடு, தமிழ்ப் பற்றையும் கவிஞர் கோடிட்டுக் காட்டுகிறார்.

வரலாற்று சுவடுகளையும், நிகழ்கால மச்சங்களையும் மனக்கண் முன் திரைப்படம் போன்று பதிக்க முற்படும் இவரின் கவிதைகளில் 'அணையட்டும் இனவாதம்', 'அணையாத் தீபம்', 'தேசம் போற்றும் வீரர்', 'அண்ணல் எனும் கவிஞன்' 'பண்புமழை பொழிந்த மேகம்', போன்ற கவிதைகள் அழகுடன் அழுத்தமானவயையாகவும் அமைந்துள்ளன.

மனவேதனையின் அழுத்தம், உள் மனதுக்குள் புதைந்துபோன வேதனைச் சூடு, கவிஞரின் "காலமெல்லாம் நினைப்போம்" என்ற கவிதையில் வெளிப்படுகின்றது.

"வாக்குரிமை காத்திடவே சென்றீர் - வெறி
வேங்கைகளின் குண்டுகளால் இறந்தீர்
ஆறாத துயரதனைத் தந்தீர் - எம்
நாவெல்லாம் புகழ்ந்திடவே மறைந்தீர்"

2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்ற 12வது பாராளுமன்றத் தேர்தலின் போது உடத்தலவின்ன மண்ணில் நிகழ்ந்த படுகொலைகள் - வரலாற்றில் மாறா வடு. அந்தச் சாகா வடுக்களை, உணர்வுடன் கலந்து,

"கொள்கைக்காய் உயிர் துறந்த உம்மை - எம்
வாழ்நாளில் ஒரு போதும் மறவோம்"என்று கவிஞர் உளமுருகி வடித்து நிற்கும் கவிவரிகளும் சாகாவரம் பெற்றவையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரின் மற்றுமொரு கவிதையான "வரட்சி
பெரியாரைப் பணிவதிலே வரட்சி
பெற்றோரைப் போற்றுவதில் வரட்சி
பிள்ளைகளின் ஓய்வினிலும் வரட்சி" என்று யதார்த்தங்களை சித்தரிக்கின்ற விதம் சிறப்பாகவுள்ளது.

ஒரு சமூகத்தின் எழுச்சி அச் சமூகத்தின் சிந்தனை வளர்ச்சியிலே தங்கியுள்ளது. சிந்தனா சக்தி சீர்பெறுமிடத்து, அவை ஆக்கபூர்வமாகவும் அமையுமெனின், 'அகதி' கலவரங்களைக் காணமுடியாது. கொலைக் கலாசாரம் கூட காண மாட்டோம். இவை அனைத்தையும் இன்று மனிதரிடையே மலினமாக இருப்பதனால் கவிஞர் இதனைத் தான் 'மனிதரிலே சிந்தனை வரட்சி' என்று நாசூக்காகச் சொல்கிறாரா?

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கவிஞரின் கவிதைகள் அநேகமானவற்றில் 'மனித நேயம்' இரக்கப்படுகின்றது. 'மனிதத்துவம் வேண்டப்படுகின்றது'. இவரது மன வெதும்பல்கள் வெப்புசாரங்கள் பல்வேறு கோணங்களில் துல்லியமாக, மென்மையாக வெளிப்படுத்தப்படும் பாங்கு பாராட்டுக்குரியது.

ஏற்கனவே கல்விசார் நூல்களை வெளியிட்டுள்ள கவிஞர் கே.எம்.எம். இக்பால் அவர்கள், முதற் தடவையாக கவிநூலில் ஒன்றை வெளியிடக் களமிறங்கியிருக்கின்றார். முதல் முயற்சியே முத்திரை பதிக்கும் எனக் கருதலாம். மேலும் பல நல்ல ஆக்கங்கள் இவரிடத்தேயிருந்து வர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

-கலாபூஷணம் புன்னியாமீன்-

14, உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802,
11-11-2004.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

சமூகத்தின் குறைகளைப் போக்கவும் மனித உள்ளங்களில் செழுமையைச் சேர்க்கவும் இலக்கியங்கள் குறிப்பாக கவிதைகள் உதவுகின்றன. இந்த வகையில் பல்வேறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமான எனது கவிதைகளில் சிலவற்றைத் தெரிந்து இப்போது உங்கள் கைகளில் தவழும் 'இதய ஒலியில்' இடம்பெற வைத்துள்ளேன். இதய ஒலி ஒரு கவிஞனின் இதயத்திலிருந்து வரும் ஒலி. சமூகம் மாண்புற வேண்டும் என்று ஏங்கிநிற்கும் ஒரு சாதாரண மனிதனின் இதய ஒலி. இந்த ஒலி பல இதயங்களுக்கும் கேட்க வேண்டும் என்பது எனது ஆசை.

இந்த இதய ஒலி உங்கள் கைகளில் தவழ்வதற்கு தி/கிண்ணியா மத்திய கல்லூரி அதிபரும், ஆசிரியர்களும், அக்கல்லூரியின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் எடுத்துக்கொண்ட கடும் முயற்சிகளுமே காரணங்களாகும். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இலங்கையின் முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் ஆகியோரின் விபரங்களை நவமணி பத்திரிகையில் எழுதிவரும் கலாபூஷணம் பி.எம். புன்னியாமீன், இதய ஒலிக்கு அணிந்துரை வழங்கியது எனக்குக் கிடைத்த கௌரவம் என்றே கருதுகிறேன். அவருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்ட திருமலை ரெயின்போ அச்சகத்தாருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

கே.எம்.எம். இக்பால்

கடற்கரை வீதி,
கட்டையாறு
கிண்ணியா – 4
2004–10–22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் மலர்ந்திடுக!

அடக்கு முறைக் கலாசாரம் மறைந்துவிட
அச்சமின்றி நள்ளிரவில் நடந்து செல்ல
அப்துல்லா அழகேசன் இணைந்திருக்க
அன்புடனே சமாதானம் மலர்ந்திடுக!

அழகு தமிழ் அரியணையில் வீற்றிருக்க
அன்பு நிலா தமிழ் மண்ணில் பவனிவர
அகதியிலா யுகமொன்று மலர்ந்திருக்க
அன்புடனே சமாதானம் மலர்ந்திடுக!

அகதிகளின் வாழ்வில் ஒளி சேர்ந்திருக்க
அனைவருமே சம உரிமை அனுபவிக்க
அரசியலில் இனவாதம் அணைந்திருக்க
அழகாக சமாதானம் மலர்ந்திடுக!

மூவினமும் ஓரினமாய்க் கலந்திருக்க
முத்தமிழின் பெருமையெலாம் பரவிவர
முதியான்சே செந்தமிழில் கவி எழுத
முனைப்புடனே சமாதானம் மலர்ந்திடுக!

ஊடகங்கள் இன உறவை வளர்த்திருக்க
ஊர் முழுதும் மகிழ்வோசை ஒலித்திருக்க
ஊனில்லா நிலைதனுமே மறைந்துவிட
உரமுடனே சமாதானம் மலர்ந்திடுக!

தமிழ்மொழியும் சட்டமொழியாகிவிட
தமிழ்ச் சான்றோர் பெருமைகளும் உயர்ந்துவிட
தண்டமிழைத் தென்னவரும் பயின்றுவர
தளர்வற்று சமாதானம் மலர்ந்திடுக!

வடபுலமும் தென்புலமும் நெருங்கிவர
வசந்திக்கு மெனிக்கேயும் மடலெழுத
வடபுலத்து நிலமெலாம் பொன் கொழிக்க
வரமாக சமாதானம் மலர்ந்திடுக!

- தினகரன் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்க கதிரவன்

இருளடைந்த உலகிற்கோர் ஒளியைப் பாய்ச்சி
இன்தமிழை வளர்பிறை போல் வாழவைத்து
அருள் நெறியை உள்ளமெலாம் தோற்றுவித்து
அன்புநிலா பவனிவர தினம் உழைத்து
தெருவெங்கும் பண்பாற்றை ஓடவைத்து
தண்டமிழை உலகமெல்லாம் பரவச் செய்து
கருக் கொண்ட மேகம்போல் குளிரவைக்க
கண்ணியமாய் கதிரவனும் வளரவேண்டும்.

பல்லினமும் சமம் என்ற கருத்தை ஏற்று
பாங்கான சமாதானம் நிலவச் செய்து
புல்லியரை சான்றோராய் மாற்றி வைத்து
பாபமதை மண்ணகத்தில் மறையச் செய்து
எல்லையில்லாத தமிழ்க் கடலில் முத்தெடுத்து
எளிதான வடிவத்தில் அதை வழங்கி நின்று
துல்லியமாய் சிந்திக்கும் வழியமைக்க
துடிப்புடனே கதிரவனும் வளரவேண்டும்.

நடுநிலையாய் எழுத்துலகில் புதுமை காட்டி
நல்லறிஞர் படைப்புக்களை வெளிக்கொணர்ந்து
ஏடுகளின் சிறப்பை நன்கு அறிய வைத்து
ஏற்றமிகு அரசியலுக்கு வழியைக் கண்டு
நாடுகின்ற மக்களுக்கு நன்மை செய்து
நாறுகின்ற அரசியலுக்கு முடிவைக் கண்டு
வீடுகளில் வெளிச்சமதை தோற்றுவிக்க
வீறுடனே கதிரவனும் வளர வேண்டும்.

ஐக்கியத்தை அவனியெங்கும் வளர்த்து நின்று
அகிம்சையினை உள்ளமெலாம் பரவச் செய்து
பக்கமெல்லாம் தமிழ் மணத்தைப் பரவச் செய்து
பைந்தமிழின் மேன்மையினை ஒளிரச் செய்து
ஏக்கமுடன் வாழும் நிலை மாற்றி வைத்து
ஏழைகளின் உணர்வுகளை வெளிப்படுத்தி
துக்கமிலா சமூகத்தைப் படைப்பதற்கு
துடிப்புடனே கதிரவனும் வளர வேண்டும்.

- கதிரவன் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமெல்லாம் நினைப்போம்!

சமூகத்தைக் காத்திடவே உழைத்தீர் - மறச்
செயலதனால் விண்ணணுலகை அடைந்தீர்
தன் மானம் காத்திடவே சென்றீர் - எழில்
பிரதவுசில் இடம்பிடிக்கச் சென்றீர்!

வாக்குரிமை காத்திடவே சென்றீர் - வெறி
வேங்கைகளின் குண்டுகளால் இறந்தீர்
ஆறாத துயரதனைத் தந்தீர் - எம்
நாவெல்லாம் புகழ்ந்திடவே மறைந்தீர்!

குண்டர்களால் உடல்சரிந்து போனீர் - எம்
உள்ளமெல்லாம் நிறைந்திடவே உயர்ந்தீர்
உணர்ச்சிகளை எமக்கூட்டி நின்றீர் - உம்
உடலதனை எருவாக்கிச் சென்றீர்!

வாகனத்தின் பக்கமெல்லாம் இரத்தம் - நம்
வெற்றிக்கு நீ தந்த தியாகம்
கண்டோரின் இதயமெலாம் சோகம் - பிறர்
நெஞ்சினிலும் சிந்தியதே இரத்தம்.

கேட்டோரின் நெஞ்சமெலாம் சோகம் - உம்
செய்தியினால் நாடெங்கும் ஏக்கம்
கொள்கைக்காய்ப் புறப்பட்ட சிங்கம் - நீர்
அடைந்திடுவீர் மேலான சுவர்க்கம்.

இடிகேட்ட நாகமதாய் ஆனோம் - உம்
உயர்வுக்காய் துவாவினையே கேட்டோம்
'விடிவுக்காய் எம்முயிரைத் தந்தோம்'' - எனக்
கூறிவிட்டு விண்ணுலகம் சென்றீர்.

பள்ளியிலே உமக்காகத் தொழுதோம் - உம்
பாவத்தைப் போக்கிடவே இரந்தோம்
உள்ளமதில் உறுதியினைத் தந்த - உம்
வாழ்க்கையினை காலமெல்லாம் நினைப்போம்!

(நவமணி - உடத்தலவின்ன படுகொலைக்காக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்துவிடு பெண்ணே!

அடக்கு முறைக் கலாசாரம் மறைந்துவிட
உத்தமியே உனை இன்று பிரிந்து விட்டேன்
முள்ளாக வேதனைகள் நெஞ்சிற் பாய
மூடனாய் இருட்டுலகில் வாழுகின்றேன்.

கற்பனைக்கு கருவான கனிரசமே!
கண்ணீரை மையாக்கி எழுதுகின்றேன்
தற்கொலைக்கு ஒப்பான காரியத்தை
தடுமாறிச் செய்ததனால் வாடுகின்றேன்

பண்பென்னும் கனிமரத்தை வெட்டிவிட்டு
பணம் தேடும் பேயாக அலையலாமா?
கண்போலும் பிள்ளைகளும் வாடுகையில்
காசினியில் நாம் நன்கு வாழலாமா?

'ஒழுக்கத்தில் ஒல்கார் உரவோர்' என்று
ஓதியது நெஞ்சமதில் அழிந்தமையால்
விழுப்பத்தின் பாற்பட்டு நெறிபிறழ்ந்து
வீணாக வெளிநாடு அனுப்பிவிட்டேன்.

தாயிழந்த கன்றுகளும் தவிப்பதுபோல்
துயருற்று நம்மக்கள் வாழுகையில்
வயிறாறி நாம் நலமாய் வாழுவதோ
வான் மறையும் ஏற்காத பாவமம்மா!

குளிக்கப்போய் அழுக்கான கதையைப் போல
கிணறு வெட்ட பூதம் எதிர் வந்தாற்போல
களிப்புடனே வாழ்க்கையினைக் கழிக்க நாடி
கண்ணீரில் நாட்களினைக் கடத்துகிறேன்!

கணவனுக்கே பணிபுரிவேன்! என்றுரைத்த
கண்மணியே! உனையங்கு அனுப்பிவிட்டு
கண்ணிழந்த குருடனாக வாழுகிறேன்
கடிதமதை கண்டவுடன் வந்துவிடு!

- சிந்தாமணி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையட்டும் இனவாதம்

விடியலுக்காய்க் காத்திருக்கும் மக்கள் மனதை
வேகவைத்து எரிகின்ற நிலையும் மாற
படிமீதை இரத்தத்தால் குளிப்பாட்டும்
பண்பற்ற கலாசாரம் முடிவைக்காண
இடிகேட்ட நாகம் போல் வாழுகின்ற
இன்னல் நிறை மக்களுமே மகிழ்ந்திருக்க
குடிமக்கள் வாழ்வதனைச் சுட்டெரிக்கும்
கொடுமை நிறை இனவாதம் அணைந்திடுக.

தென்னிலங்கை உள்ளங்களை வழிகெடுக்கும்
தெளிவில்லா அரசியலும் மறைந்து போக
துன்பநிலை தொடர்ந்திடவே சூழ்ச்சி செய்யும்
துஸ்டர்களின் செல்வாக்கும் குறைந்து போக
இன்பநிலை தோன்றிடவே இனிதுழைக்கும்
இனியவரும் ஆட்சியிலே நிலைத்திருக்க
வன்செயலைத் தீவெங்கும் வளர்க்கின்ற
வஞ்சம் மிகு இனத்தீயும் அணைந்திடுக.

கண்களினைக் குளமாக்கும் காலங்களும்
கனவுகளாய்க் காணாமல் தொலைந்திருக்க
பண்பாற்றைச் சுரக்கின்ற உள்ளங்களாய்
பெரும்பான்மை உள்ளங்களும் கனிந்திருக்க
எண்ணமதை நஞ்சாக்கும் செய்திகளை
ஏடுகளும் தவிர்த்து நல்வழியைக் காட்ட
வண்ணமிகு வாழ்க்கையினை நரகமாக்கும்
வஞ்சமிகு இனவாதம் அணைந்திடுக.

மிருகம் போல் மனதையும் 'ரவுண்டப்' செய்யும்
மிருகநிலை தொடர்ந்திடாது நின்றுபோக
சருகுகளாய் வாடிவிட்ட வாழ்க்கையுமே
சீர்மைமிகு புஸ்பங்களாய் மலர்ந்திருக்க
தெருவெங்கும் சிரிப்பலைகள் தொடந்து பாய
தீயோர் தம் தவறுகளைத் திருத்திக் கொள்ள
உருவான போர் நிறுத்தம் தொடர்ந்திருக்க
ஊரெங்கும் இனவாதம் அணைந்திடுக!

- நவமணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயம் வேண்டும்

மாவலியின் நீருற்றும் நாணும் வண்ணம்
மங்காத அறிவூற்று எங்கள் நேயம்
தவறுகளைச் சுடுவதிலே அது நெருப்பு
தகைமைகளைக் காப்பதிலே முழுநிலவு
ஆவலுடன் காத்திருக்க வைக்கும் நேயம்
அன்பருக்கு கிடைத்துவிட்ட அமுதமாகும்
பாவமெனும் இருளதனை அகற்றும் கதிராய்
பேசரிய சிறப்பினதாய் துலங்கும் நேயம்

தர்மத்தின் வழிநின்று சேவை செய்யும்
தரணிக்கோர் கலையமுதம் எங்கள் நேயம்
சீர்பெற்ற ஆக்கங்களைத் தாங்கிநின்று
சீலமுடன் பவனிவரும் எங்கள் நேயம்
நேர்வழியில் மனுக்குலத்தை நடத்திடவே
நேயமரம் மாதமொரு மலரைப் பூக்கும்
பார் என்னும் நங்கையவள் புனிதமாக
பவனிவரும் புதுத் தென்றல் நேயமதே!

இனபேதம் பாராது சேவை செய்யும்
இளைஞர்களின் நெஞ்சமதில் இருக்கும் தீபம்
சினமென்னும் சுடுநெருப்பைச் சேர்ந்திடாது
சேவை செய்யும் மாணவரின் உதயகீதம்
மனதினிலே மாசுகளை அகற்றும் தீபம்
மங்காத புகழ் நெய்யில் ஒளிரும் தீபம்
தனக்கெனவே இடத்தினையே பிடித்துவிட்ட
தரமான பத்திரிகை எங்கள் நேயம்

கல்வி என்னும் அகல்விளக்கை ஒளிரவைத்து
கடமைதனை தலைமேலே சுமந்து நிற்கும்
இல்லாளின் இதயமதைக் கவர்ந்திருக்கும்
இனிதான ஆக்கங்களைத் தாங்கி நிற்கும்
நல்லோரின் ஆசிகளைப் பெற்ற நேயம்
நடு நிலைக்கே உரைகல்லாய் திகழும் நேயம்
பல்லாண்டு வாழ்க உந்தன் பணிகளென்றே
பரவசமாய் வாழ்த்துக்களைச் சூட்டுகிறேன்.

- நேயம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் போற்றும் வீரர்

தேசியத்தை வளர்ப்பதற்கு உயிர் கொடுத்து
தளர்ச்சியிலா முயற்சியினை தினம் வழங்கி
நேசமதை மண்மீது கொண்டிருந்து
நெடுநாளாய் உரிமைக்குப் பாடுபட்டு
பேசரிய தியாகமதை செய்ததாலே
பெரியோராய் வரலாற்றில் இடம்பிடித்து
தேசத்தின் வீரர்களாய் உயர்ந்து நின்று
தரணியிலே மங்காத புகழடைந்தீர்!

உரிமைகளை வென்றெடுக்க அணிதிரட்டி
ஒற்றுமையை உள்ளமதில் தினம் விதைத்து
அரிவையரும், ஆடவரும் கண் விழிக்க
அரிய பல திட்டங்களைச் செயற்படுத்தி
பரிதவிக்கும் இலங்கையரின் துயர்துடைக்க
பாங்குடனே சுதந்திரத்திற்காய் குரல் கொடுத்து
எரிகின்ற இலங்கையிலே தென்றல் வீச
இணையில்லா செயல்புரிந்த வீரர் வாழ்க!

அடிமையெனும் துயர்சூழ்ந்த மக்கள் வாழ்வில்
ஆறுதலைத் தந்துவிட்ட சுதந்திரத்தை
படிமீது நாம் என்றும் அனுபவிக்க
பாங்காகத் தியாகமதை செய்து நின்று
துடிப்பாக அவர் செய்த சேவையினால்
துன்பமிலா வாழ்க்கையினைத் தொடருகின்றோம்
முடியவில்லை அவர் புகழும் நிலவுலகில்
மண்ணகத்தில் அவர் நாமம் என்றும் வாழ்க

தூங்கி நின்ற மக்களையும் எழுப்பிநின்று
துடிப்புடனே செயலாற்ற வழிவகுத்து
பாங்குடனே சுதந்திரத்தை இலங்கை காண
பற்றுடனே நாட்டிற்காய்ச் சேவை செய்து
ஏங்கி நின்ற மக்களுக்கு இதமளித்து
எடுபிடியாய் நின்றநிலை மாற்றிவைத்து
தாங்கிலாத வேதனைகள் பல சுமந்து
தேசமது போற்றுகின்ற வீரரானீர்.

- நவமணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாத் தீபம்!

இருளரக்கன் தனியாட்சி செய்தவேளை
இகத்திலுள்ளோர் துயில் செல்ல முயலும் காலை
பொறுமைக்கு இலக்கணமாய் வங்கக் கடலும்
பாய்போல அலையின்றி இருந்த வேளை
தருமத்தின் மறு மதிப்பாய் வாழ்ந்த எங்கள்
தலைவனவன் சயனிக்க இருந்த காலை
வெறிகொண்டு உயிர் பறிக்க வந்த குண்டு
வேங்கையவன் உயிரதனைக் குடித்ததம்மா!

ஒரு பாவம் அறியாத கண்கள் அன்று
ஒரு நிலையில் நின்றதனை மறக்கலாமா?
தருமத்தை நிலையாகப் புரிந்த கைகள்
தளர்வுற்று விழுந்ததனைப் பொறுக்கலாமா?
விருப்புடனே ஈசன்வழி செல்லும் கால்கள்
வலுவிழந்து சோர்ந்ததனை தாங்கலாமா?
இருமைக்கும் பணிசெய்த மஜீது அன்று
இரத்தத்தில் குளித்ததனை சகிக்கலாமா?

மக்களுக்கு தொண்டனாக வாழ்ந்த முத்து
மறவரையும் மனிதராகச் செய்த முத்து
முக்கனியும் செந்தமிழும் நிறைந்த மூதூர்
மண்ணகத்தில் கண்டெடுத்த மதுரமுத்து
எக்கணமும் நேர்மையினை விலக்கிடாது
எளிமையிலே எப்போதும் வாழ்ந்த முத்து
சக்கரையில் அமுதத்தில் கலந்த பேச்சை
சகமீதில் கொண்டிருந்த பவளமுத்து

வற்றாத மாவலிபோல் சிறந்திருந்த
வளமான தமிழ்மொழியின் இன்பவூற்று
கற்றோரும் மற்றோரும் வியக்கும் வண்ணம்
கடமையிலே மையல் கொண்ட கர்மவீரன்
உற்றாரே யன்றி பகைவரையும் வென்றே
உரிமைக்கு குரல் கொடுத்த புரட்சி கீதம்
சொற்போரில் அவன் சிங்கம்! கருணை வெள்ளம்!
செகத்திலுள்ளோர் உள்ளங்களில் அணையாத்தீபம்!

- ஏ.எல்.அப்துல் மஜீது நினைவு மலர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பு மழை பொழிந்த மேகம்

தூற்றுகின்ற பகைவரையும் அரவணைத்து
தூய்மையினை அரசியலிலே கலக்கவைத்து
நாற்றமிகு பண்புகளைக் கொண்டவரை
நானிலத்தில் நல்லவராய் ஆக்கிவைத்து
போற்றுகின்ற குணக்குன்றாய் வாழ்ந்திருந்து
பூவுலகில் அருள் நதியாய் சுரந்திருந்து
சீற்றமிலா வாழ்க்கையினை வாழ்ந்த மஹ்றூப்
சீர் முழுதும் கவிதைக்குள் அடக்கலாமோ?

அன்பென்னும் இதயமதைக் கொண்டிருந்து
அறிவென்னும் எழில் நிலவாய்ச் சிறந்திருந்து
துன்பத்தை நீக்குகின்ற உணர்வைப் பெற்று
துடிப்புடனே செயலாற்றும் திறனைப் பெற்று
வன்முறை களில்லாத நாட்டைக் காண
வாழ்நாளை விருப்புடனே அர்ப்பணித்து
வன்முறையால் உயிர் நீத்த எங்கள் மஹ்றூப்
வரிசைகளைக் கவிதைக்குள் அடக்கலாமா?

மாவட்ட மந்திரியாய் பதவியேற்று
மன்னாரைப் பலதுறையில் ஒளிரவைத்து
கவலையிலே உழல்கின்ற ஏழையரை
களிப்புடனே வாழும் நிலை ஆக்கி வைத்து
உவப்புடனே எதிர்க்கருத்தை செவிமடுத்து
உவமையிலா அழகனாக ஒளிர்ந்திருந்து
பாவ இருள் மலிந்துள்ள உலகினிலே
பண்பு மழை பொழிவித்த மேகம் நீயே!

பண்பென்னும் மலைத் தொடரில் அவர் முகடு
பரிதவிக்கும் இதயங்களுக்கு இனிய தென்றல்
கண்ணிழந்த மனிதருக்கு அவர் விளக்கு
கடமைதனைச் செய்வதிலே அவர் நெருப்பு
புண்ணியங்கள் செய்வதிலே அவர் சிரேஷ்டர்
புதுமைகளைப் புரிவதே அவர் இலக்கு
எண்ணிறைந்த மக்களுக்கு அவர் தொண்டன்
ஏற்றமிகு சேவையிலே அவர் இமயம்

- நவமணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் எனும் கவிஞன்

கவிவாணர் உலகினிலே தனி ஒளியாய்
கீர்த்தி பெறும் பெருங்கவியே எங்கள் அண்ணல்
புவிமீதில் ஹயாத்தும்மா ஈன்றெடுத்த
பாங்கான கவியரசே அண்ணல் சாலிஹ்

வங்காளக் கடலலையின் ஓசை கேட்கும்
வரிசைமிகு கிண்ணியாவில் அவதரித்தார்
பாங்கான பிதாவாம் முகம்மது சுல்தான்
பக்குவமாய்க் கவிக்குயிலை வளர்த்தெடுத்தார்.

பயிற்சி பெற்ற ஆசிரியராய் பதவிபெற்று
பள்ளிகளில் தமிழ் மழையை பெய்து நின்றார்
வயிற்றுக்கு உணவில்லா ஏழ்மையிலும்
வாடாத பாமாலை புனைந்து நின்றார்.

மஹாகவியின் கவிதையிலே வாஞ்சை கொண்டு
மனக்கறையைப் போக்குகின்ற கவிபடைத்தார்
மஹாத்மாவின் நெறிகளிலே காதல் கொண்டு
மனித இன விழுமியத்தைப் பாடிநின்றார்.

கவிதையிலே உணர்வுகளைத் தூண்டி நின்று
காதலுக்கோர் அண்ணல் என்ற நாமம் பெற்றார்
புவிமீது உடல்சாயும் நாள்வரையும்
பைந்தமிழின் நிலை உயர்த்தப் பாடுபட்டார்.

மண்ணகத்தின் இருளகற்றி ஒளியைப் பாய்ச்சும்
முழுநிலவின் பேரழகைக் கவியில் தேக்கி
கண்ணில்லா குருடருமே பார்வை பெற்று
காசினியில் செழித்தோங்கப் பாடிநின்றார்.

மதம்மீது பற்றுள்ள அண்ணல் சாலிஹ்
மதவெறியை தம்கவியில் கலக்கவில்லை
இதமுடனே தம்மண்ணைப் புகழ்ந்தபோதும்
இழிவாக பிறர் பதியைச் சாடவில்லை.

**- புதுஊற்று (வ.கி.மா. கல்வி அமைச்சின் சஞ்சிகை)**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிரிக்கும் தலைவர்

பட்டினத்தை புனிதமாக ஆக்குகின்ற
பண்பதனை வாழ்வாகக் கொண்டதனால்
பட்டியிலும் தொட்டியிலும் அவர் படமாய்
பதிந்திருந்து ஓட்டைகளை அடைத்து நின்றார்.

ஏழைகளின் பங்காளர் என்பதனை
எண்டிசையும் பறைசாற்ற அவர்படமாய்
மழைதனிலே நனைவுற்று குளிரைத்தாங்கி
மனங்குளிர சுவர்களிலே சிரித்து நின்றார்
கனல் பறக்கும் சுடுமொழியால் ஏசுவாரை
கரிகொண்டு அவர் அழகை அழிப்பவரை
சாணியினை அவர் தலையில் பூசுவாரை
சாந்தமுடன் எப்போதும் புன்னகைப்பார்

விலங்கினமும் நல்வாழ்வு பெற்றுவிட
வையகத்தில் அவர்வாழ்வு அமைந்ததனால்
சலங்கையொலி எழுப்பிவரும் மாடுகளும்
சாப்பிடவே தன்னுடலைத் தந்திடுவார்.

சந்தியிலும் சாலையிலும் அவர் சிரிப்பார்
சாய்ந்துள்ள கம்பத்திலும் அவர் இருப்பார்
சந்தையிலும் வீடுகளிலும் அவர் படமாய்
சலியாது புன்னகையை வாரி நிற்பார்.

"துன்பத்தில் சிரித்திடுக" என்ற கொள்கை
தரணியிலே அவர் பேச்சாய் இருப்பதனால்
தன்முகத்தை இரு கூறாய்க் கிழிக்கையிலும்
தளராது இன்முகத்தைக் காட்டிடுவார்.

தாழ்ச்சியினை இனிதாகத் தாங்குகின்ற
தன்மையினை அவர் உள்ளம் கொண்டதனால்
தோல்வியினைத் தேர்தலிலே பெற்றிடினும்
தளராது அவர் படத்தில் சிரித்திடுவார்.

- சிந்தாமணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரட்சி

மண்ணகத்தில் கடுங்கோடை வரட்சி
மழையின்றி பார் முழுதும் வரட்சி
மனிதரிலே சிந்தனையில் வரட்சி
மங்கையரும் சிக்கனத்திலே வரட்சி

பள்ளிகளின் பெறுபேற்றில் வரட்சி
பண்பதனைப் பேணுவதில் வரட்சி
பணிவுடமை மாணவரில் வரட்சி
பவ்வியமாய் நடப்பதிலே வரட்சி

செல்வந்தர் தாமத்தில் வரட்சி
செருக்குகளைக் குறைப்பதிலே வரட்சி
செயலாக்கம் கொள்வதிலே வரட்சி
செய்தபிழை ஏற்பதிலே வரட்சி

அகதிகளைப் போற்றுவதில் வரட்சி
அன்பூற்று சுரப்பதிலே வரட்சி
அகிம்சைக்கு மண்ணகத்தில் வரட்சி
அனுதினமும் நிம்மதிக்கு வரட்சி

இன்சொல்லை உரைப்பதிலே வரட்சி
இகமீதில் பக்திக்கு வரட்சி
இரசனைக்கு வாழ்வதனில் வரட்சி
இதயமதில் கருணைக்கு வரட்சி

அலுவலகத்தில் திறமைக்கு வரட்சி
அரசியலிலே நேர்மைக்கு வரட்சி
அகம்பாவம் அழிப்பதிலே வரட்சி
அழிவில்லாக் காதலுக்கு வரட்சி

ஏர்த்தொழிலை விரும்புவதில் வரட்சி
எளிமையினை நாடுவதில் வரட்சி
எழில்தமிழமைப் போற்றுவதில் வரட்சி
எழிலார்ந்த பேச்சுக்கு வரட்சி

- நவமணி -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீங்காத சோகம்

கடற்பயணம் மேற்கொண்ட உம்மை - இடை
வழியினிலே விதி சந்தித்த துண்மை
கடல்நடுவில் இரையாகிப் போனீர் - எம்
கண்ணிரெண்டும் குளமாக ஆச்சு

காற்றோடு கலந்ததும் அழுகை - நம்
உணர்வோடிணைந்ததும் நினைவு
பெற்றோரும் உம்பிரிவால் துடித்தார் - துயர்க்
கடலடியில் முழுவதுமே ஆழ்ந்தார்

அக்கரைக்குச் சென்றிடவே முயன்றீர் - மறு
உலகதனைச் சென்றடைந்து விட்டீர்
துக்கமெனும் கருமேகம் வந்து - நாம்
நினைவிழந்து உணர்வற்றுப் போனோம்.

கடலதுவும் இசைக்கின்ற கீதம் - உம்
பிரிவதனால் வடிக்கின்ற நாதம்
மழைமேகம் பொழிகின்ற நீரும் - உம்
பிரிவதனால் வடிகின்ற கண்ணீர்

வாழ்வதினிலே ஒன்றாகக் கலந்தீர் - நாம்
வாய்விட்டு அழுதிடவே இறந்தீர்
சுகமாகத் தாலாட்டும் கடலும் - உம்
முடிவுக்கு காலாகிப் போச்சு

மண்மீது மகிழ்வுடனே வாழ்ந்தீர் - துயர்
பெருகிடவே கடலோடு கலந்தீர்
மகிழ்வுடனே படகினிலே சென்றீர் - எம்
இதயமது அழுதிடவே மறைந்தீர்

உள்ளத்தில் ஏற்பட்ட காயம் - உம்
பிரிவாலே ஏற்பட்ட சோகம்
வருடங்கள் பல சென்றபோதும் - எம்
உள்ளத்திரையில் நீங்காது சோகம்.

**(1993-01-25இல் மூதூர் படகு விபத்து நினைவாக)**

**- நவமணி -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைக்கு வாருங்கள்

எழிலான துறைமுகத்தை இனிதாகப் பார்த்திடவே
எம் நாட்டுச் செல்வத்தை மனங்குளிரக் கண்டிடவே
விழிகளுக்கு விருந்தான நீர்ப்பரப்பை ரசித்திடவே
விருப்பமாய்த் திருமலைக்கு விஜயமொன்றைச் செய்யுங்கள்

ஒல்லாந்தர் கட்டுவித்த உறுதிமிகு கோட்டைகளும்
ஒழுங்கிசைவாய் அமைவுற்ற கலங்கரை விளக்குகளும்
எல்லோரும் விரும்புகின்ற இறங்குதுறைக் காட்சிகளும்
எழிலாகப் பார்த்திடவே விஜயமொன்றைச் செய்யுங்கள்

கன்னியாவில் அமைந்துள்ள சுடுநீர் கிணறுகளும்
கடும்பாவக்கறை நீக்கும் சுடுநீரைத் தந்திடுமே
பொன்போலும் உம்மேனி பொலிவுற்று விளங்கிடவே
பிரியமுடன் திருமலைக்கு விஜயமொன்றைச் செய்யுங்கள்

பாடல்பெற்ற தல மாக இம்மண்ணில் அமைந்துள்ள
பக்தர்களின் மனங்கொண்ட கோணேசர் ஆலயமே
நடராசர் புகழ் பரப்பும் கோயில்களைப் பார்த்திடவே
நலமாகத் திருமலைக்கு விஜயமொன்றைச் செய்யுங்கள்

சீர்மிகுந்த சிங்கப்பூர் நாட்டாரும் இம்மண்ணில்
சிறப்பாக ஆலையொன்று அமைத்திட்டார் நன்றாக
பேர்பெற்ற பிரிமாவின் எழில்தனைப் பார்த்திடவே
பாங்கான திருமலைக்கு விஜயமொன்றைச் செய்யுங்கள்.

கடும் உழைப்பில் உயர்ந்திட்ட யப்பான் நம் நாடும்
கீர்த்திமிகு ஆலைதனை நம் நாட்டில் அமைத்ததுவே
தேடுகின்ற சீமெந்துத் தொழிற்சாலை கண்டிடவே
தேட்டமாய் திருமலைக்கு விஜயமொன்றைச் செய்யுங்கள்.

மூவினமும் திருமலையில் ஒன்றாக இணைந்திருப்பர்
முக்கனியும் மீன்வளமும் இம்மண்ணில் நிறைந்திருக்கும்
ஆவினமும், மானினமும் பக்கமெல்லாம் நிறைந்திருக்கும்
அழகான திருமலைக்கு விஜயமொன்றைச் செய்யுங்கள்.

- நவமணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழிந்திடுவாய்!

மாதர்களின் கனவுகளைச் சமாதி கட்டி
மாநிலத்தில் மகிழ்ச்சியினை வேரறுத்து
பாதகரின் ஆசைக்கு எண்ணெயூற்றும்
பாவத்தின் சின்னமே ஒழிந்திடுவாய்!

அன்பென்னும் பாலத்தைத் தகர்த்து நின்று
அறிவென்னும் பேரொளியை மழுங்கடித்து
பொன்போன்ற ஒழுக்கத்தை நீராக்கும்
பேதமையின் இலக்கணமே ஒழிந்திடுவாய்!

ஆடவரை சந்தையிலே ஏலம் வைத்து
ஆண்மைக்கு பேரிழுக்கை ஏற்படுத்தி
தேடவரும் அரிவையரைச் சாகடிக்கும்
தேள்விசமே! சீதனமே! ஒழிந்திடுவாய்!

மாசற்ற காதலுக்கு தடையாகி
மாநிலத்தில் உள்ளங்களை பிரியவைத்து
நீசர்களின் ஆசைக்கு துணைபோகும்
நச்சுப் பாம்பே! சீதனமே! ஒழிந்திடுவாய்!

பெண்களைக் கண்ணீரில் முழ்கடித்து
பெற்றோரை சாவிற்குப் பலியாக்கி
மண்ணகத்தில் பேதமையை வளர்த்து நிற்கும்
மடமையின் மறுபதிப்பே ஒழிந்திடுவாய்!

கற்றோரின் கருத்துக்களைப் புதைத்து நின்று
கன்னியரின் கனவுகளைக் கலைத்து நின்று
பெற்றோரின் உள்ளங்களைப் பிழிந்து நிற்கும்
மடமையின் முழு உருவே ஒழிந்திடுவாய்!

- தினகரன் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநிலத்தில் மனிதத்துவம் மறைந்து விட்டது

கனியிருக்க காய்பறித்து உண்பதுபோல்
காலமெல்லாம் பொய்யுரைத்து வாழுகின்றார்
பனிபோன்ற வெள்ளை நிற உலகமெல்லாம்
பாவமெனும் சாகரத்தில் மூழ்கியதே!

வருவிருந்து பார்த்திருப்பின் வானத்தவர்க்கு
விருந்தாளியாகிவிடுவான் என்றுரைக்கும்
அருட் குறளை வாழ்க்கையிலே தாங்கிவாழும்
அன்பான மனித நேயம் தொலைந்து போச்சே!

முல்லைக்கு தேரீந்தான் பாரி அன்று
மயிலுக்கு போர்வையீந்தான் காரி நன்கு
பொல்லாத பாவியென்று தாயைத்திட்டும்
பாவிகளால் மனித நேயம் இறந்து போச்சே

விதவைக்கு வாழ்வளித்தார் நபியும் அன்று
வனிதையரின் ஆடைகளே ஆண்கள் என்றார்
இதமாக பெண்ணுரிமை வகுத்தபோதும்
இகமீதில் பெண்ணடிமை தொடர்கிறதே!

மஹர் கொடுத்தே பெண் எடுக்க வேண்டும் என்று
மறைபோதர் நபிநாதர் நவின்றபோதும்
மோகமதால் கண்மறைந்த காரணத்தால்
மண்ணகத்தில் சீதனப்பேய் வாழ்கிறதே!

நட்புக்கு இலக்கணமாம் குகனின் பண்பும்
நட்புக்காய் உயிர் தந்த கர்ணன் நலமும்
மற்போருக்கிணையில்லா வாலி வாழ்வும்
மறைந்ததனால் மனிதத்துவம் மறைந்து போச்சே!

குருநாதர் சிலை செய்த ஏகலைவன்
கடும் பயிறசி தனைச் செய்து வீரனானான்
கருமேக உளங்கொண்ட மாணவரோ
காசினியில் ஆசிரியரைத் தூற்றுகிறார்

**(கிண்ணியா மத்திய கல்லூரி நடாத்திய கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதைகளில் சில)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்று வருக ரமழானே!

பணத்தாசை கொண்ட மைந்த பாவியரை
பண்பாற்றால் குளிக்கவைத்து புனிதம் செய்தாய்
உணர்வின்றி வாடும் நிலை அறிந்திடாத
உள்ளங்களை பசிப்பிணியில் திளைக்கச் செய்தாய்
குணமில்லா புல்லியரை மாற்றிவைத்து
குவலயத்தைக் குணக்குன்றாய் ஆக்கிவைத்தாய்
மணம்வீசி அருள்தந்த ரமழானே!
மண்ணகத்தின் நிலை காக்க சென்று வருக!

இருளாட்சி கண்டிருந்த இதயமதில்
இன்னருளும் பொங்கிடவே துணையிருந்தாய்!
அருளதனை அவனியிலே மணக்கச் செய்து
அகமதில் தீன்சுடரை ஏற்றிவைத்தாய்
மருளதுவும் மண்ணகத்தில் மறைந்தழிய
மறையொலியை இல்லமதில் ஒலிக்கச் செய்தாய்
அருள் சிறக்க வலம் வந்த ரமழானே!
அகிலத்தைப் பண்படுத்த சென்று வருக!

நாறுகின்ற வாழ்க்கையினைச் சீரபடுத்தி
நடுநிசியில் தொழுகின்ற பண்புதந்தாய்
வீறுடனே பாவமதைப் புரிபவரை
வேதநெறிப் பாதையிலே செல்லவைத்தாய்
உறுதியினை உள்ளமதில் ஒளியைப் பாய்ச்சி
சிறுமைகளை அகற்றி வைத்த ரமழானே!
சீருயர்ந்த வாழ்வு தர சென்று வருக!

பாவவிருள் சூழ்ந்திருந்த உள்ளங்களை
பரிசுத்தமாக நீ மாற்றிவைத்தாய்
ஆவலுடன் கொள்ளைகளைச் செய்தவரை
அகிம்சைக்கு இருப்பிடமாய் ஆக்கிவைத்தாய்
ஏவலினை மறந்திட்ட உள்ளமதை
ஏந்தல்வழி செல்லும் நிலை செய்துவைத்தாய்
பாவநெறி மாற்றிவிட்ட ரமழானே!
பார் என்றும் சிறந்திருக்க மீண்டும் வருக!

- நவமணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் பிறந்தேன்?

காவியமே போற்றுகின்ற கன்னியரை
கண்ணீரில் மூழ்கடிக்கும் சீதனப்பேய்
புவியெங்கும் அரசாட்சி செய்தவனை
பார்ப்பதற்கா பூமிதனில் நான் பிறந்தேன்?

அறிவென்னும் இளந்தென்றல் வீசுகின்ற
ஆற்றல்மிகு விஞ்ஞான உலகமதை
குறிபார்த்துக் கொல்லுகின்ற இனவாதக்
கொடுமைகளைப் பார்ப்பதற்கா நான் பிறந்தேன்?

தர்மமெனும் அகல்விளக்கை அவனியெங்கும்
தளராது அறநூல்கள் ஏற்றிவைத்தும்
நேர்மையிலா நெஞ்சங்கள் பெருகிவரும்
நிலை கண்டு அழுதிடவா நான் பிறந்தேன்?

விழிநீரில் பேதத்தைக் கண்டிடாமல்
வேற்றுமையை உதிரத்தில் பார்த்திடாமல்
குழிபறிக்கும் சாதியினை வளர்த்து நிற்கும்
கொள்கையில்லா உலகினிலா நான் பிறந்தேன்?

சிந்தனையின் திருவுருவம் மனிதன் என்றே
சிறப்புமிகு நூல்கள் என்றும் கூறிநிற்கும்
மந்தையிலும் கீழாக அவனை மாற்றும்
மதுவரக்கன் வெறிகாண ஏன் பிறந்தேன்?

-- சிந்தாமணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பங்கள் வருவதில்லை

ஒழுக்கத்தை உயிரெனவே கொண்டு வாழ்ந்தால்
ஒருபோதும் துன்பங்கள் வருவதில்லை
பழுதான வார்த்தைகளைத் தவிர்த்து வாழ்ந்தால்
பார்மீது துன்பங்கள் வருவதில்லை
ஏழைகளை எந்நாளும் போற்றி வாழ்ந்தால்
எப்போதும் துன்பங்கள் வருவதில்லை
உழைப்பினையே மூச்சாகக் கொண்டு வாழ்ந்தால்
உறுதியாய்த் துன்பங்கள் வருவதில்லை.

போதுமென்ற பொன் மனதைப் பெற்றுவிட்டால்
பொல்லாத துன்பங்கள் வருவதில்லை
சூதினையும் மதுவினையும் துறந்துவிட்டால்
துன்பங்கள் ஒருபோதும் வருவதில்லை
மேதினியில் காளையர்கள் சிறந்திருந்தால்
மெல்லியர்க்குத் துன்பங்கள் வருவதில்லை
தீது செயும் மண்ணாசை விட்டுவிட்டால்
தினம் அலைக்கும் துன்பங்கள் வருவதில்லை.

தாய் நாட்டின் உயர்ச்சிக்குப் பாடுபட்டால்
தரணியிலே துன்பங்கள் வருவதில்லை
காய் தவிர்த்து கனியினையே நுகர்ந்திருந்தால்
கடுகளவும் துன்பங்கள் வருவதில்லை
வாய்மையினை வாழ்வாகக் கொண்டு வாழ்ந்தால்
வறுமையிலும் துன்பங்கள் வருவதில்லை
தூய்மையினை வாழ்வினிலே பேணிவாழ்ந்தால்
கொல்லுலகில் துன்பங்கள் வருவதில்லை.

**- சிந்தாமணி -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி பிறந்தது

பகலவன் சூட்டில் கொதித்துவிடும்
பாலைவனமாய் இருந்த நெஞ்சில்
சுகந்தம் பரப்பும் தென்றலைப்போல்
சுற்றம் மகிழப் பிறந்ததுவே!

அறுந்துவிட்ட மாலையதன்
அலைக்கழிந்த மணிகள் போல்
பிரிந்து வாழும் மனுக்குலத்தைப்
பிணைக்கப் பிறந்த என் குழந்தை

உதிரம் உருவம் ஒத்திருந்தும்
உலகில் பிணக்கைத் தோற்றுவிக்கும்
சாதிப்பேய்க்குச் சமாதி கட்டிச்
சாதனை புரியப் பிறந்ததுவே!

நங்கையரை நானிலத்தில் சாகடிக்கும்
நற்பண்பை விழுங்கிவிடும் சீதனத்தை
அங்கமெலாம் தேய்வடைய உழைப்பதற்கே
அகிலத்தில் பிறந்ததுவே என் குழந்தை!

அறியாமை அகன்றிடவே உழைப்பதற்கும்
அநியாயம் செய்பவரை ஒடிப்பதற்கும்
வறியோரின் துயரினையே முடிப்பதற்கும்
வல்லோனின் அருளினால் பிறந்ததுவே

தனியுடமை முறையெங்கும் அழிந்திடவே
தரணியிலே பொதுவுடமை மலர்ந்திடவே
மனிதரிலே உயர்பண்பு விளைந்திடவே
மண்ணகத்தில் என் குழந்தை பிறந்ததுவே!

- சிந்தாமணி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற ஆக்கங்கள்

1. பதுறுத்தீன் புலவரின் முகியித்தீன் புராணம் (செய்யுள் விளக்கம்) - 1994

2. சமூகக் கல்வி வினாவிடை (11ம் தரம்) - 2000

3. சமூகக் கல்வி வினாவிடை (10ம் தரம்) - 2000

4. பாட்டி சொன்ன நீதிக்கதைகள் 10 (பத்திரிகையில் வெளிவந்தது) - 2001

5. காட்டுராஜா (சிறுவர் நாவல்) (பத்திரிகையில் வெளிவந்தது) - 2003

6. மரணத்தின் விளிம்பில் (சிறுவர் நாவல்) (பத்திரிகையில் வெளிவந்தது) - 2004

7. சமூகக்கல்வி செயல் அட்டைகள் - 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org